# தகவல் ஏடு


**வளங்குன்றா மீன்வள மற்றும் பல்லுயிர் தன்மை பாதுகாப்பிற்காக பெருங்கடல் பங்காண்மை – புதுமுறை காணுதல் மற்றும் சீரமைப்பு. வங்காள விரிகுடா திட்டம்**

## இந்திய கடல்களில் உள்ள சூரை/ கேரை மற்றும் சூரை போன்ற மீன்கள்

(பொதுவாக சிறிய டியூனா மீன்களை சூரை என்றும் பெரிய டியூனா மீன்களை கேரை என்றும் தமிழில் அறியப்படுகிறது)

### கேரை மீன் / அல்பகோர் (துன்னஸ் அலாலுங்கா)


கேரை மீன் அனைத்துப் பெருங்கடல்களுக்கும் இடம் பெயரக்கூடியது. இது ஒற்றை சிற்றின வகை கூட்டங்களாக நீந்துகிறது. ஸ்கிப் ஸாக் சூரை மீனுடன் இதுவும் சிறிய கலனில் (டின்) பதப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இது ‘திடமான வெள்ளை’ கேரை மீன் எனப் பெயரிடப்பட்டு உள்ளது. இது 1.4 மீ நீளம் மற்றும் 60 கிகி எடை வரை வளரக்கூடியது.



கேரை மீன் /அல்பகோர்

### முண்ட கண் சூரை மீன் (துன்னஸ் ஒபிசஸ்)

முண்ட கண் சூரை மீன்அனைத்து வெப்ப மண்டல மற்றும் மிதவெப்ப மண்டல பெருங்கடல்களின் திறந்த நீர்ப் பரப்புகளில் காணப்படுகிறது. இந்தியாவில், இது மஞ்சள் துடுப்பு சூரை மற்றும் ஸ்கிப் ஸாக் வரிச்சூரை மீன்கள் அளவிற்கு அதிகமாக காணப்படுவதில்லை. இது 2.5 மீ நீளம் மற்றும் 210 கிகி எடை வரை வளர்கிறது. இது சஸிமி தரத்திற்காகவும் (கிரேடு) மற்றும் வாட்டுதற்கு ஏற்றதாகவும் இருப்பதால் விரும்பத்தக்கதாக உள்ளது.



முண்ட கண் சூரை மீன்

### வரிச்சூரை மீன் / ஸ்கிப்ஸாக் (கட்சுவோனஸ் பெலாமிஸ்)

இந்த சிற்றின வகைகள் வெப்ப மண்டல மற்றும் சூடான மிதவெப்ப மண்டல நீர்ப்பகுதிகளில் பரவலாக காணப்படுகின்றன. இது 1.0 மீ நீளம் மற்றும் 30 கிகி எடை வரை வளரக்கூடியது. வரிச்சூரை அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் உட்பட அனைத்து இந்திய கடலோர பகுதி நெடுகிலும் கண்ணி வலைகள் மற்றும் ஆயிரங்கால் தூண்டில்கள் மூலமாகவும், லட்சத் தீவுகளில் கழி மற்றும் கயிற்றுத் தூண்டில்கள் மூலமாகவும் பிடிக்கப்படுகின்றன. இந்தியாவில் இது 99,000 மெட்ரிக் டன்கள் வரை பிடிக்கலாம் என மதிப்பிடப்பட்டு உள்ளது.



வரிச்சூரை மீன் / ஸ்கிப்ஸாக்

### மஞ்சள் துடுப்பு கேரை மீன் (துன்னஸ் அல்பகேர்ஸ்)


மஞ்சள் துடுப்பு கேரை மீன் முக்கியமாக வெப்ப மற்றும் மித வெப்ப மண்டல பெருங்கடல் நீர்ப்பரப்புகளில் பரவியுள்ளது. இந்திய பெருங்கடல் மீன்வளத்தில் இது 30 செமீ முதல் 180 செமீ வரை நீள அளவுகளில் காணப்படுகிறது. இது 2 .4 மீ நீளம், 200 கிகி எடை வரை வளர்கிறது. சிறிய மீன்கள் கடல் மேற்பரப்புகளிலும், பெரிய மீன்கள் கடல் மேற்பரப்பு மற்றும் மேற்பரப்புக்கு சற்று கீழ் உள்ள நீர்பரப்பை எல்லைகளாகக் கொண்டு உள்ளன. இதன் சாத்தியமான மகசூல் 80,000 மெட்ரிக் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. மஞ்சள் துடுப்பு கேரை மீனில் இருந்து அதிக மதிப்பு வாய்ந்த சஸிமி மற்றும் லாயின்ஸ் தயாரிக்கப்படுகின்றன.



மஞ்சள் துடுப்பு கேரை மீன்

### கருப்பு கோலா மீன் / பிளாக் மர்லின் (இஸ்டியோபாக்ஸ் இண்டிகா)

இந்த மீன்கள் இந்திய மற்றும் பசிபிக் பெருங்கடல்களின் வெப்ப மற்றும் மித வெப்ப மண்டல பகுதிகளில் பரவலாக காணப்படுகின்றன. அதிக பட்ச நீளம் 4. 65 மீ மற்றும் 750 கிகி எடையுடன், இது பெரிய எலும்பு மீன்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்த மர்லின் மீன்கள் மிக வேகமாக நீந்தக்கூடிய மீன்களில் ஒன்றாகவும், மணிக்கு 129 கிமீ வரை வேகத்தை எட்டக்கூடியதாகவும் உள்ளன.



கருப்பு கோலா மீன் / பிளாக் மர்லின்

### அளவன் மீன் / புளு மர்லின் (மக்கைரா நைகிரிகேன்ஸ்)

இந்த நீலக்கோலா மீன் 5 மீ நீளம் மற்றும் 636 கிகி எடை வரை வளரக் கூடியது. இது தனியாக, இடம் பெயரக்கூடியது மற்றும் வெப்பமான நீரை விரும்புகிறது. இது கடலின் மேற்பரப்பை ஒட்டி நீந்துகிறது, ஆனால் பெரிய அளவில் ஆழமான பகுதிக்குள் குழியோடவும் இதனால் முடியும்.



அளவன் மீன் / புளு மர்லின்

### அளவன் மீன் / ஸ்டிரைப்பிடு மர்லின் (காசிகியா அடாக்ஸ்)


அளவன் / கோலா மீன் / ஸ்டிரைப்பிடு மர்லின்– மர்லின் குழுவில் ஒரு சிறிய சிற்றின வகையாகும், இந்திய–பசிபிக் பெருங்கடல்களின் வெப்ப மற்றும் மிதவெப்ப நீர்பரப்புகளில் காணப்படுகிறது. இது 4.2 மீ நீளம் , 440 கிகி எடை வரை வளரக் கூடியது.



அளவன் மீன் / ஸ்டிரைப்பிடு மர்லின்

## ஏமீன்/ ஸ்வோர்டு மீன் (சைப்பியஸ் கிலாடியஸ்)

ஏ மீன் / கொம்பங்கோலா மீன் / ஸ்வோர்டு மீன் வெப்ப மற்றும் மிதவெப்ப மண்டல பெருங்கடற்பகுதிகளில் பரந்த அளவில் காணப்படுகிறது. இது கடலின் மேற்பரப்பில் இருந்து 550 மீ ஆழம் வரை காணப்படுகிறது. பொதுவாக இது 4.5 மீ நீளம் மற்றும் 650 கிகி எடை வரை வளர்ச்சி அடைகிறது. இது முக்கியமாக ஆயிரங்கால் தூண்டில் மூலம் பிடிக்கப்படுகிறது.



ஏமீன் / ஸ்வோர்டு மீன்

## மயில் மீன் / இந்திய–பசிபிக் பாய்மர மீன் (இஸ்டியோபோரஸ் பிளாட்டிப்டீரஸ்)

மயில் மீன்கள் / பாய்மர மீன்கள் வெப்பமான பெருங்கடல்களில் பெரும்பாலும் காணப்படுகின்றன. இதற்கு பாய்மரபாய் போன்ற விறைப்பாக எழுந்து நிற்கக்கூடிய முதுகு துடுப்பு மற்றும் ஸ்வோர்டு மீன் மற்றும் பிற மர்லின் மீன்களை ஒத்த ஒரு நீண்ட வாள் போன்ற மேல் தாடை உள்ளது. இது 3.5 மீ நீளம் மற்றும் 100 கிகி எடை வரை வளர்கிறது. இந்த மீன்கள் ஆயிரங்கால் தூண்டில் மூலம் பிடிக்கப்படுகின்றன.



மயில் மீன் / இந்திய–பசிபிக் பாய்மர மீன்

## புல்லட் சூரை மீன் (ஆக்ஜிஸ் ரோச்சி)

புல்லட் சூரை மீன்கள் உலகைச் சுற்றியுள்ள வெப்ப மண்டல பெருங்கடல்களில் 50 மீ ஆழத்தில் அண்மைக் கடற்பகுதிகளில் காணப்படுகின்றன. இதன் அதிக பட்ச நீளம் 50 செ மீ ஆகும். இது பாரம்பரிய மீன்வளத்தில், குறிப்பாக இந்திய கடற்பகுதி நெடுகிலும் வழி வலை மீன்பிடிப்பில் முக்கியத்துவம் வாய்ந்தது. கரையேற்றப்பட்ட மீன்பிடிபாடுகளில் ஆக்ஜிஸ் தசார்டுவுடன் கலந்து இருக்கும்.



புல்லட் சூரை மீன்

## எலி சூரை மீன் / பிரிகேட் சூரை மீன் (ஆக்ஜிஸ் தசார்டு)

எலிச் சூரை மீன் / பிரிகேட் சூரை அண்மைக்கடற் பகுதியைச் சேர்ந்த ஒன்றாகும். பிடிபாடுகளில் இதன் பொதுவான அளவு 25 மற்றும் 40 செ மீ –க்கும் இடைபட்ட அளவுகளில் இருக்கலாம், ஆனால் பயன்படுத்தப்பட்ட வலை வகையைப் பொறுத்து, மற்றும் பருவகால மற்றும் பிராந்திய அடிப்படையில் இந்த அளவு வேறுபடலாம். இந்தியாவில், பாரம்பரிய வழி வலை மீன்வளத்தில் கிடைக்கிறது.



எலி சூரை மீன் / பிரிகேட் சூரை

## இரத்தச்சூரை மீன் / கவாகவா சூரை மீன் (யுதுன்னஸ் அப்பினிஸ்)


இது ஒளிபுகும் கடல் நீரின் மேற்பரப்பில், 18 முதல் 29 டிகிரி செல்சியஸ் வெப்ப அளவுகளில் ஆழமற்ற கடற்பகுதியில் வாழும் ஒரு சிற்றினமாகும். இந்திய கடல்கள் நெடுகிலும் மிகவும் அதிக அளவில் காணப்படும் சூரை மீனாகவும், கரையேற்றப்படும் சூரை மீன்பிடிபாடுகளில் 42 சதவீதத்திற்கு பங்களிக்கிறது. இந்தியாவில் இது முக்கியமாக வழியும் செவுள் வலைகள் மூலம் பிடிக்கப்படுகிறது. 38,646 மெட்ரிக் டன்கள் வரை பிடிக்கலாம் என மதிப்பிடப்பட்டு உள்ளது.



இரத்தச்சூரை மீன் / கவாகவா

## நீண்ட வால் சூரை மீன் (துன்னஸ் டோங்கால்)

நீண்ட வால் சூரை மீன் ஒளிபுகும் கடல் நீரின் மேற்பரப்பில், முதன்மையாக இந்தியாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதி நெடுகிலும் காணப்படும் ஆழமற்ற கடற்பகுதிகளில் வாழ்கிறது. ஒரு சிறிய மீன் 145 செமீ வரை வளர்கிறது, ஆனால் மீன்வளத்தில் காணப்படும் பொதுவான நீளம் 40 மற்றும் 70 செமீ இடைபட்ட அளவுகளில் உள்ளது. இது முக்கியமாக வழியும் செவுள் வலைகள் மற்றும் கயிற்றுத் தூண்டில் மூலம் பிடிக்கப்படுகிறது. சாத்தியமான மகசூல் 8,128 மெட்ரிக் டன்கள் என மதிப்பிடப்பட்டு உள்ளது.



நீண்ட வால் சூரை மீன்

## சீலைச் சூரை மீன் / ஓரியெண்டல் பொனிட்டோ (சார்டா ஓரியெண்டாலிஸ்)

சீலைச்சூரை மீன் / ஓரியண்டல் பொனிட்டோ ஒரு சிறிய மற்றும் மெல்லிய உடலமைப்பைக் கொண்ட கடலோர சூரை மீன், இந்திய பசிபிக் பகுதிகளில் பரவியுள்ளது. இது 100 செமீ மற்றும் 10 கிகி எடை வரை வளரக்கூடியது. 30 முதல் 50 செமீ நீள மீன்கள் மீன்பிடிப்பில் கிடைக்கின்றன. பொனிட்டோ வழியும் செவுள் வலைகள் மூலம் பிடிக்கப்படுகிறது.



சீலைச் சூரை மீன் / ஓரியெண்டல் பொனிட்டோ

## நாய் பல் சூரை மீன் (ஜிம்னோசார்டா யூனிகோலார்)

இது ஒரு மெலிந்த மற்றும் நீண்ட உடலமைப்பைக் கொண்ட சூரை மீன், இந்திய பசிபிக் பகுதியில் பரவி இருக்கிறது. இது 250 செமீ நீளத்தை அடைகிறது, 40 முதல் 60 செமீ நீள மீன்கள் மீன்பிடிப்பில் கிடைக்கின்றன. இது செவுள் வலைகள் மூலம் பிடிக்கப்படுகின்றன.



நாய் பல் சூரை மீன்

**Bay of Bengal Programme Inter-Governmental Organisation**
91, St. Mary's Road, Abhiramapuram, Chennai 600 018, India
Phone: +91-44-24936188, 24936294; Fax: +91-44-24936102; Email: admin@bobabnj.org; info@bobpigo.org